அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 299

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
23 ஜூலை, 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரச கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்.

## முன்னை நாட் படைச் சேவையாளருக்குச் சலுகை

அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனமொன்றில் பணிபுரிய விரும்பும் ஆயுதப் படைகளைச் சேர்ந்த முன்னை நாட் படைச் சேவையாளருக்குப் பின்வரும் சலுகைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

(அ) வயது :- விண்ணப்பிக்கும் பதவிக்கான விதிக்கப்பட்ட உச்ச வயதெல்லையினுள் அவரைக் கொண்டு வர முடியுமானால் முன்னை நாட் படைச் சேவையாளரின் வயதில் இருந்து அவர் ஒழுங்கான படைச் சேவையிலிருந்த காலத்தைக் கழித்தல்.

(ஆ) கல்வித் தகைமை :- ஒரு பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதிக்கப்பட்ட ஆகத் தாழ்ந்த கல்வித் தரத்தை அடுத்த குறைந்த தரத்துக்குக் குறைத்தல்.

(இ) தொழினுட்பத் தகைமை :- தொழினுட்பத் தகைமைகளை மதிப்பிடும் பொழுது ஆயுதப்படைச் சேவையில் தொழினுட்ப அலகுகளில் சேவைபுரிந்த காலத்தில் பெற்றுக் கொண்ட திறமையையும் அனுபவத்தையும் கவனத்திற் கொள்ளுதல்.

(ஈ) நியமனச் சம்பளம் :- 28.12.1983 ஆம் திகதியையும் 233-ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையினதும் தாபனக் கோவையின் VII-ஆம் அத்தியாயத்தினதும் ஏற்பாடுகளே பிரயோகமாகுதல்.

02. இந்தச் சுற்றறிக்கையின் நோக்கத்தைப் பொறுத்தமட்டில் 'முன்னை நாட்படைச் சேவையாளர்' என்னும் பதமானது ஓய்வு பெற்றவரும் அல்லது தனது சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்தவருமான ஆயுதப்படைச் சேவையிலிருந்து விலகிய ஓர் உத்தியோகத்தரை அல்லது படைச் சேவையாளரைக் குறிக்கும்.

..(3)

03. இதற்கிணங்க ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் திருத்துவதற்கும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தல்களில் இந்தச் சலுகைகளைச் சேர்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

04. 20.03.1958 - ஆம் திகதியையும் 434 - ஆம் இலக்கத்தையும் கொண்ட திறைசேரி சுற்றறிக்கை இதனால் தள்ளுபடி செய்யப்படுகிறது.

ஒப்பம் : டி. பி. ஜ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.